# நீலமேகம், சம்பத்
# கோவிந்தசாமி, S.K. சாமி

கலைச்செல்வன்

கலைமன்றம்
சென்னை-1

வெளியீடு : 113
முதற் பதிப்பு: நவம்பர் 1953
உரிமை உடையது

விலை ரூ. 0—8—0

விற்பனை நிலையம்:
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்
சென்னை-1

# சந்தேகம் கொள்ளவில்லை

★

இயக்க முன்னணி வீரர்களான தோழர்கள் **நீலமேகம், சம்பத், கோவிந்தசாமி, எஸ். கே. சாமி** அவர்களின் வாழ்க்கை குறிப்புகளில் சிலவற்றை இதில் விளக்கப்பட்டிருக்கின்றன. பல தோழர்கள் திராவிட இயக்கத் தலைவர்களின் வாழ்க்கை வர்ணனைகளை நூல் வடிவில் காண விரும்பியதால் அதனை எங்களால் முடிந்த அளவு செய்தோம்.

இந்த முன்னணி வீரர்களான இவர்கள் வாழ்க்கை வரலாற்றை படித்து திராவிடம் பயனடையும் என்பதில் நாங்கள் சந்தேகங் கொள்ளவில்லை.

வணக்கம்

**கலைமன்றத்தினர்**

## ஊடுருவி எழுதியவை

ஆராய்ச்சி

| | |
|---|---|
| கோயில்கள் | (இங்கர்சால்) |
| சீர்திருத்தம் | ,, |
| மூடநம்பிக்கை | ,, |
| மதங்கள் | ,, |
| உண்மை | ,, |
| மக்கள் உரிமை | ,, |
| அறியாமை | ,, |
| கடவுள் | ,, |
| அரசாங்கம் | (லெனின்) |
| மாஜி கடவுள்கள் | |
| தொழிலாளர் | (மாஜினி) |

வரலாறு

| | |
|---|---|
| கலிங்கப்போர் | |
| வீரமங்கை ஜோன் | |
| உலகைத் திருத்திய உத்தமர்கள் | (1-ம் பாகம்) |
| ஒளி விளக்குகள் | (2-ம் பாகம்) |
| சீனத்துச் சிங்கம் | |
| ரஸ்புடீன் | |
| வால்டையர் | |
| நெப்போலியன் | |

கதைகள்

| | |
|---|---|
| ரோமியோ-ஜூலியத் | (ஷேக்ஸ்பியர்) |
| லைலா - மஜ்னு | |
| நா நா | (எமிலிஜோலா) |

# நீலமேகம்

தஞ்சை மாவட்டத்தை நினைக்கும் போது திரா விடர் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் இருந்தாலும் முத லில் நம் நினைவுக்கு வரக்கூடிய ஒருவருடைய பெயர் தான் திரு. K. K. நீலமேகம்.

நீலமேகம் என்னும் திருப்பெயரைக் கேட்டவுடன், தந்தையின் பெயர் கேட்ட மைந்தர் போலவும், சகோ தரனின் பெயரைக் கேட்ட உண்மைச் சகோதரனைப் போலவும் மனதிலே மகிழ்ச்சியும், முகத்திலே மலர்ச்சி யும் கொள்வர் தி. மு. கழகத் தோழர்கள்.

திரு. நீலமேகம் அவர்கள் ஒரு சிறந்தப் பேச்சாளர் அல்ல. எழுத்தாளரும் அல்ல. ஆனல் அவர் உரை யாடல்களை பேச்சாளர்கள் மதித்து ஏற்றுக் கொள்வர். ஏன் தாங்கள் பேசும்போது அவைகளைச் சுட்டிக்காட்டி பெருமை பெறவும் நினைப்பர். எழுத்தாளர்களும் அப் படித்தான்.

அவர் மேடையிலே அதிகநேரம் பேசியதில்லை. இருந்தாலும் அழகிய கருத்துக்களைப் பேசுவார். அவர் பல நல்ல திட்டங்களை சொல்லாமல் செய்து காட்டும் ஆற்றலுடையவர்.

அவருடைய பெருந்தன்மையான தோற்றமும், புன் முறுவலுடன் வரவேற்கும் நிலைமையும், முரடனை

தில் அவர்கள் திருப்தி அடையவில்லை. ஒரு நூல் நூற்புச் சங்கமே வைத்து நடத்தினர். ஏறக்குறைய 1000 ரூபாய் முதல்போட்டு 40 ராட்டுகளை வாங்கினர். அவ்வளவு ராட்டுகளையும் சூழன்றுடுவது கண்டு மகிழ்ந்தார்.

தாம் கொண்ட கொள்கையில் கடுகளவும் தவறாது பரந்த மனதுடன் தான் எதனையும் செய்வார். திரு. நீலமேகம் அவர்கள் எதனையும் ஒளிவு மறைவின்றி பேசுவார் செய்வார். அந்த அளவுக்கு நல்ல உள்ளமும் நேர்மைப் போக்கு உடையவர்.

காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கதருடை அணிந்தவுடனே அவரிடம் இருந்த அந்நிய நாட்டுத் துணிகள் ஒன்றையும் விடாமல், அதன் விலையைப்பற்றியும் கவலைப் படாமல் எரித்துச் சாம்பலாக்கினர்.

குருகுலப் போராட்டம் இவருக்குப் பலச் சந்தேகங்களை முதலில் எழும்பி, பின்னர் நல்லதொரு தெளிவைத் தந்தது. இருந்தாலும் அன்று அரசியலில் ஆசை காட்டி ஆர்வங் கொள்ளச் செய்த டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்களின் மேல் கொண்ட பற்றை மட்டும் விட முடியாமலிருந்தார்.

இவ்விதமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருந்த போது விருதுநகரில் 1927-ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்க மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில்தான் பெரியார் இராமசாமியை திரு. நீலமேகம் அவர்கள் சந்திக்கும் வாய்ப்பு பெற்றார். அன்று அங்கு ஏற்பட்ட தொடர்பு—பற்று—பாசம் நாளுக்கு நாள் வளர் பிறையாகிக் கொண்டே யிருந்தது.

அன்றையிலிருந்து திரு. நீலமேகம் அவர்கள் நமது இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தார். ஆம் காந்தி பக்தர்; பெரியாரின் நண்பராஞர், உண்மையான அன்பராஞர். அவர் உடலாலும், பொருளாலும் இயக்கத்திற்காகவே அரும் பாடுபட்டு வந்திருக்கிருர்.

அன்று முதல் இன்றுவரை ஒரு சிறு குறையும் அவர் மீது யாரும் கூறியது கிடையாது. அவரும் சிறு சிறு குற்றங்களை சுட்டிக் காட்டி அதனை பெரிதாக்கி குழப்பம் உண்டுபண்ணும் கோஷ்டியில் சேரவு மில்லை. அதாவது அவர் எல்லோருக்கும் நல்லவர், எல்லோரும் அவருக்கு நல்லவர் என்பதில் சந்தேகமில்லை. இவ்வித மான பெருமை யாருக்கும் கிடைப்பதில்லை. ஆனல் திரு நீலமேகம் அவர்களுக்குக் கிடைத்தது.

நாகைப்பட்டணத்திற்கு அருகில் உள்ள குருக்கத்தி என்னும் சிற்றூர் ஒன்று உண்டு. அது தான் திரு. நீல மேகம் அவர்களின் ஊர். அவருடைய தந்தையார் பெயர் குப்புசாமிப்பிள்ளை.

திரு. நீலமேகம் அவர்கள் ஓர் வியாபாரி. 'மும் மூர்த்தி விநாயகர்' சுருட்டுகளைத் தயாரிப்பவர். அவர் இயக்கத்தில் சேர்வதற்கு முன்னரே இந்தப் பெயர் வைக்கப்பட்டு நல்ல செல்வாக்குடன் விற்று வந்ததால் அந்தப் பெயரை இன்று வரையில் அவர் மாற்றவில்லை.

அவருக்கு ஆறு பிள்ளைகள் உண்டு. அதில் மூன்று ஆண்கள், மூன்று பெண்கள். தன் பிள்ளைகளுக்கு அவர் திருமணம் செய்து வைத்தார் சுயமரியாதை முறைப்படி.

திரு. நீலமேகம் அவர்கள் இயக்கபணியினை தன் அன்ருட வாழ்விலே கலந்த பணியென கருதி சிறப்பாகவும், செம்மையாகவும் செய்து வந்திருக்கிருர். பெரியார் இராமசாமி அவர்களிடம் பேரன்பு பூண்டிருந்தார்.

குடந்தையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் எடுத்துக்கொண்ட பொறுப்பு திராவிடம் நன்கு அறியும். அந்தப் போராட்டத்தின் போது பெரியார் இராமசாமி அவர்களுடன் திரு. நீலமேகம் அவர்களும் கைது செய்யப்பட்டு சிறைசென்ருர்.

திரு நீலமேகம் அவர்கள் மும்முறை சிறை சென்றிருக்கிருர். இவர் எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை நன்கறிந்து அதற்கேற்பச் செய்வதில் திறமையாளர்.

இவர் உண்மையை மிகவும் நேசித்தார். உண்மையாளர்கள் என்று தெரிந்தால் அவர்களிடம் மணிக்கணக்காய் மலர்ந்த முகத்துடன் உரையாடுவார். அப்படி யில்லாமல் பெரிய மனிதர்கள் என்ற பெயர் மட்டும் வைத்துக் கொண்டு பொய்யர்களாய் இருப்பவரை மதியார். அவருடைய தயவு தாட்சண்யத்தைப் பற்றிக் கவலை கொள்ளார். தன் மனதிலே பட்டதை பட்டபடியே அவர்களிடம் கூறி அவர்களைக் கண்டிப்பார். இவ்விதமான தூய நெஞ்சமுடையவர், எ.த னை யும் மறைத்து வைத்துக் கொள்ளும் தன்மை அவரிடம் கிடையாது.

பெரியார் திருமணம் செய்து கொண்டார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்திஞர். அப்போது கூட

பெரியவரை வெறுக்கவில்லை. பெரியாரின் கொள்கையை எதிர்த்தார்.

அதன் பின்னர் திரு. நீலமேகம் அவர்கள்கூட கண்ணீர் துளிகள் ஒரு துளியாக மாறி நமது மதிப்பிற்குரிய அறிஞர் அண்ணாவின் தலைமையிலே பணியாற்றி வந்தார்.

தி. மு. கழக தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாநாடு மாயவரத்தில் நடைபெற்றது. அதன் வரவேற்புக் குழுத் தலைவர் திரு. நீலமேகம் அவர்கள். அந்தச் சமயத்தில் பெரியார் அவர்களால் நடத்தப்படும் விடுதலைப் பத்திரிகையில் "திராவிட முன்னேற்றக் கழகம்" அண்ணாதுரை போன்ற பெயர்களே வெளிவிடக் கூடாது என்ற கட்டுத்திட்டம் போடப் பட்டிருந்தது. விடுதலைப் பத்திரிகை அண்ணா எழுதிய புத்தகங்களை விளம்பரப் படுத்தவும் முடியாது என்று கண்டிப்பாக மறுத்து விட்ட காலம். அந்தக் காலத்தில் ஒரு நாள் விடுதலைப் பத்திரிகையில் தஞ்சை மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டு விளம்பரம் பெரிய அளவில் வெளி வந்திருக்கிறது. இதனைக் கண்ட அனைவரும் வியந்தனர்? யாராலும் செய்ய முடியாத செய்கையல்லவா இது. பெரியார் முடிவை மாற்றிய ஆற்றலுடையவர் யார்? என்ற பல கேள்விகள் எழுந்தன. அந்த அளவுக்கு ஒரு தனி மனிதர் செல்வாக்கு பெற்றிருந்தார் அவர் தான் திரு. நீலமேகம் அவர்கள். ஆம்! செயற்கரிய செய்த பெரியார்.

எவராலுமே வெறுக்க முடியாத வெள்ளையுள்ளம் படைத்த அந்த மனிதர், நமது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்திருக்கிறார்.

1942-ஆண்டு அவருடைய இல்லக் கிழத்தியார் இயற்கை யெய்தினர் ஆம்! அன்று அவருடைய வயது 40 அந்தச் சமயத்தை அவர் தனிமையாகக் கழித்திருக்க லாம் ஆனல் அவர் அப்படி செய்ய வில்லை. மறுமணம் செய்து கொண்டார். அந்தத் திருமணத்திலே ஓர் உண்மை இருந்தது. அதாவது அவர் இயக்க கொள்கை யை நடை முறையில் செய்து காட்ட கலப்பு மணம் செய்து கொண்டார்.

இவ்விதமாக எந்த இடத்தில் இயக்கக் கொள்கை யைத் தம் வாழ்வில் கடைபிடிக்க இடம் கிடைக்கிறதோ இடத்தில் அதனை அந்த செய்து காட்டும் செயல் வீரர். இத்தகைய நல்ல செயல் திறமும், உயர்ந்த பண்பும் அவரிடம் இருப்பதால்தான் இன்று அவர் ஓர் பெரிய மனிதராக விளங்குகின்றார்.

திரு. நீலமேகம் வயதிலே முதிர்ந்தவர். ஆனல் உள்ளவலிவிலே இளைஞர். அவரிடம்தான் தஞ்சை மாவட்டத்தின் முழு பொறுப்பும் தரப்பட்டிருக்கிறது. அதனை பொறுப்புணர்ந்து செய்து, தி. மு. கழகத்தையும் திராவிட நாட்டையும் கட்டிக்காத்து மக்களின் துணைவ ராக இருப்பார் என்பதில் நமக்கு ஐயமில்லை. திரு. நீல மேகம் நல்லவர்; செயல் ஆற்றுவதில் வல்லவர்.

அவர் வாழ்க!

திராவிட நாடு திராவிடருக்கே!

# சம்பத்

மக்கள் கூடியிருந்தனர், கூட்டம் நடந்து கொண்டிருந்தது. தலைவர் யாரோ ஒருவர் பெயரைக் கூறி, அவர் பேசுவார் என்று சொல்லிவிட்டு அமர்ந்தார். கூட்டத்தில் அங்குமிங்குமாக ஒரு சிலர் கைதட்டினர். மேடையில் ஒருவர் தோன்றினர். அவரைக் கூட்டத்தில் பெரும்பாலோருக்குத் தெரியாது. சிறந்த பேச்சாளர்களின் பட்டியலில் பேசும் நபரின் பெயர் இடம் பெற்றில்லை. எனவே மக்கள் ஏனோ, தானோ வென்று கேட்டுக் கொண்டிருந்தனர். சிலர் பேச்சைக் கேட்காமல், தமக்குள் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

விரும்பி கேட்காதவர்களின் செவிகளிலும் பேச்சாளரின் சொல்லம்புகள் நுழைந்தன. காந்தம் நெருங்க, நெருங்க அதை நோக்கி ஓடி அதனுடன் ஒட்டிக் கொள்கிறதே இரும்பு அதைப் போல, மக்கள் சொற்பொழிவாளரின் பேச்சோடு ஒன்றிவிட்டனர் கேளாமல், வராத விருந்தினரை, வருந்தி யழைக்காத பழம் நிறைந்த மரம் நோக்கி பறந்து செல்லும் பறவைகளாக ஆக்கிவிட்டது, மேடையில் பேசியவரின் பேச்சு!

தங்கு தடையற்ற சொற்பெருக்கு; அழுத்தம் திருத்தமான சொற்கள், ஒவ்வொரு சொல்லும் கூட்டத்தினர் யாவர்க்கும் புரியும்படி நிறுத்தி நிதானமாக

அழுத்தம் திருத்தமாகப் பேசும் முறை; ஆகியவை அங்கிருந்த அனைவரையும் கவர்ந்தன.

மெதுவாகக் கூட்டத்தினர் பக்கத்திலிருந்தவரிடம் யார் இவர்? பெயர் என்ன? என்று கேட்கத் தொடங்கினர். 'சம்பத்' பெரியாரின் தமையனாரின் மகன் என்ற பதில் கிடைத்தது. மக்கள் வியந்தனர்! சம்பத் எப்படி இவ்வளவு சீக்கிரம், சிறந்த பேச்சாளரானார் என்று அதிசயத்தனர். அன்று சம்பத் பேசி முடிக்கும் போது பெருத்த கைத்தட்டல் எழுந்து, வெகு நேரம் ஒலித்துக் கொண்டிருந்தது!

சம்பத் பேசுவார் என்பதே பலருக்கு மிகப் பலருக்குத் தெரியாது! அந்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்தப் பின் மேடையில் ஈடு இணையற்ற சொற்பொழிவாளராக சம்பத் விளங்கினார், வியக்காதவர் எவர்? குறுகிய காலத்தில் பேச்சுலகில், சிறந்த பேச்சாளரான மிகச் சிலரில், சம்பத்தும் ஒருவர்! முதல் படத்தில் நட்சத்திரப் பதவி அடையும் புதிய நடிகரானார், சம்பத்! புகழேணியில் வேகமாக ஏறினார்!

ஆஜானு பாகுவான தோற்றம் — பாண்டிய மன்னனைப் போன்ற உருவம் கட்டுமஸ்தான தேகம்— கலங்காத நெஞ்சம்—ஆடம்பரமில்லாத உடை—அழகு தோளில் அணி செய்யும் சால்வை—அரிய கருத்து நிறைந்த, ஆணித்தரமான பேச்சு — இவை ஒன்று சேர்ந்த ஒருவர்தான் சம்பத்!

சம்பத் மேடையில் 'மைக்' முன்னல் நின்று, பேச ஆரம்பித்தால், மக்கள் அவர் பேச்சோடு ஒன்றிவிடுவர் கூட்டத்தில் சத்தமிருக்காது. துரும்பு விழும் சத்தம் கூட இரும்பு விழுந்ததைப் போல இருக்கும்! சம்பத் பேசுவார்! தடங்கல் இருக்காது! வசந்த காலத்தில் வீசும் இளந்தென்றலைப் போல, தோன்றுமிடத்தில் நிதானமாக இனிய ஓசையுடன் செல்லும் ஆற்றின் ஒழுங்கான போக்கு போல சம்பத்தின் பேச்சு செல்லும்! அவர் தொண்டைகிழிய கத்தமாட்டார். மிதமான குரலில் பேசுவார்! ஆனல் அதில் தோன்றும் அழுத்தம், வற்புறுத்தல், மிக அதிகம். வள்ளுவர் பேச்சுக்கு வகுத்த இலக்கண வரம்பு இயற்கையாகவே அவர் பேச்சிலே இருக்கும். பேசும்போது கால்கள் இடம் விட்டு பெயர மாட்டார்! உடல் மட்டும் இப்புறமும், அப்புறமுமாகத் திரும்பும்! இடையிடையே, தன்னை விட்டு நழுவ பார்க்கும் சால்வையை இழுத்துப் போட்டுக் கொள்வார் அதனல் பேச்சு பாதிக்காது!

சம்பத் யாரைப் போல பேசுகிறார்? இப்படி ஒரு கேள்வி எழுந்தால், விடையிறுக்க ஒண்ணுது! அவரைப் போல யார் பேசுவார்? என்ற மறு கேள்விதான் அக் கேள்விக்கு பதிலாக அமையமுடியும்! சம்பத் தனக் கென பேச்சுலகில் தனி முறை அமைத்துக் கொண்டவர் அவரைப்போல அவரைத் தவிர எவரும் பேசவில்லை!

திராவிட நாட்டில் பேச்சாளர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென தனி முறையமைத்துக் கொண்டு, பேசு கின்றனர். அவர்கள் வேண்டுமென்று அமைத்துக் கொள்ளாவிடினும், இயல்பாக ஒரு முறை அமைந்து

விடுகிறது! அண்ணாவின் பேச்சில் அழகு நடை, அரிய கருத்து, அற்புத உவமானங்கள் அமைந்திருக்கும். நெடுஞ்செழியன் நல்ல கருத்துக்களை நகைச்சுவையுடன் நடிப்புடன் எடுத்துரைப்பார். அன்பழகன் அழகு தமிழில் இலக்கிய மணங் கமழ பேசுவார். கருணாநிதியின் பேச்சில் கனல் தெறிக்கும், டி. கே. சீனுவாசனின் பேச்சு சிந்தனையைக் கிளறும்! சிற்றரசின் பேச்சில் கோபம் கொழுந்து விட்டெரியும்! அதைப் போல சம்பத்தின் பேச்சில் அழுத்தத்தைக் காணலாம்! அர்த்த புஷ்டியான வாக்கியங்கள் கேட்கலாம்! பசுமரத்தாணி போன்றது அவர் பேச்சு! காட்டிக் கொடுக்கும் கயவர்களை, இன உணர்ச்சியற்றவர்களை அவர் எப்படி விவரிக்கிறார் தெரியுமா? 'தாசர் புத்தித் தலைக்கேறி விட்டக் குலக் கோடாரிக் காம்புகள்' என்கிறார் இதை விட அருமையாக எவர் கூறமுடியும்?

நகைச்சுவையாகப் பேசலாம்! நல்ல நூல்களில் பொதிந்திருக்கும் பொன்னுரைகளை எளிதில் எடுத்துரைக்கலாம்! வையத்தின் வழிகாட்டியாக விளங்கிய வித்தகர்களின் வரலாறுகளை சித்தரித்து விடலாம்! இவற்றைஎளிதல் ஏசலாம்! அப்படியே போற்றலாம்! இவையாவும் பேச்சாளருக்கு மிக எளிதானவை ஆனால் பொருளாதாரத்தை பற்றி பேசுவது, புள்ளிவிவரங்களை விளக்குவது, பலதிறபட்ட அரசாங்கங்களின் அரசியல் கொள்கைகளை பாமரர்களுக்கும் புரியும்படி எடுத்துரைப்பது இவை கடினம்! மிகமிகக் கடினம்! அதைவிடக் கடினம் அவற்றை மக்கள் பொறுமையாகக் கேட்பது! சம்பத்திற்கு இவை எளிதானவை! மிக மிக எளிதானவை!

பொருளாதார புள்ளி விவரங்களைப் புட்டுப் புட்டுக் காட்டுவார்! வெளி நாட்டு அரசியல் கொள்கையின் கோளாறை விளக்குவார்! பிற நாட்டு அரசியல் செய்திகளை இனிமையான எளிய நடையில் சித்தரிப்பார். அவர் பேச்சை விரும்பிக் கேட்பவர்கள் 'சம்பத்தின் பேச்சு தெவிட்டாத தேன்!' என்பார்கள்.

சம்பத் பேசும் போது ஆளும் கட்சியினரின் அக்ரமச் செயல்களை ஆதாரத்தோடு கூறுவார். அதைக் கேட்கும் மாற்றுக் கட்சித் தோழர்களுக்கு கோபம் வரத்தான் செய்யும். சம்பத் கூட்டத்தைக் கலைத்து விட கோபத்தில் மதியிழந்த, சொந்த புத்தியற்ற, சோதாக்கள் முயற்சிப்பார்கள். அவர்கள் முயற்சியை விழலுக்கிறைந்த நீராக்குவார் வீரர் சம்பத்!

சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு கூட்டம் நடந்தது. அது தேர்தல் பிரசாரக் கூட்டம். மத்திய சபைக்கு நின்ற 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பால சுப்ரமணியம் அவர்களையும், மாகாண சபைக்கு நின்ற அப்துல் மஜீத் அவர்களையும் ஆதரிக்கக் கூட்டப்பட்டது அக்கூட்டம். அதில் சம்பத் பேச வந்திருந்தார்.

பலர் பேசினர். அதன் பிறகு இறுதியாகப் பேச சம்பத் எழுந்தார்! தனக்கே உரித்தான பாணியில், பேசிக்கொண்டிருந்தார். அஹிம்ஸா அரசாங்கத்தின் 'அற'ச்செயல்களை அழகாக வருணித்துக்கொண்டிருந்தார். 'காங்கிரஸின் கண்யம்' காற்றில் பறந்து கொண்டிருந்தது. அவர் பேசி முடிக்கப்போகும் நேரம்!

சம்பத் தேர்தல் முடிவுகளைப்பற்றிச் சிறிது பேசினார். அப்போது பல விடங்களில் தேர்தல் நடந்துவிட்டிருந்தது. சில விடங்களின் முடிவு வெளிவந்து விட்டிருந்தன. அப்போதய முதலமைச்சர் குமாரசாமிராஜா தேர்தலில் ஸ்ரீவல்லிபுத்தூர் தொகுதியில் நின்றார். தேர்தல் முடிந்து பல நாட்களாகியிருந்தன. ஆனால் அதுவரையில் முடிவு வெளிவரவில்லை.

சம்பத் அன்று தம் பேச்சை முடிக்கப்போகும் தருவாயில், "காங்கிரஸ்காரர்கள், எங்கெந்த விடங்களில் தாங்கள் வெற்றி பெறுவோம் என்று நினைக்கிறார்களோ, அந்தந்த விடங்களின் தேர்தல் முடிவை விரைவில் வெளியிட்டுவருகிறார்கள். தோல்வி நிச்சயமெனத் தெரிந்தால், அவ்விடங்களின் முடிவை உடனடியாகத் தெரிவிக்காமல் தள்ளிப் போடுகிறார்கள். மக்கள் மனத்தில் காங்கிரஸ் கரையும் காட்சியைக் காட்டக் கூடாது என்று நினைக்கிறார்கள்" என்று கூறினார். அவர் மேலும் பேசும்போது, "குமாரசாமிராஜா நின்ற தொகுதியின் முடிவு ஏன் இன்னும் தெரிவிக்கவில்லை" என்று கேட்டார். அங்கு, முதலமைச்சருக்குத் தோல்வி நிச்சயமிருக்கும், இல்லையென்றால் முடிவு என்றோ வெளியிட்டிருப்பார்கள் என்று அறுதியிட்டுக் கூறினார். பின் காங்கிரஸார் தேர்தல் நடத்தும் ஊழல்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

கூட்டத்தில் சில கைக்கூலிக் கயவர்கள் வந்திருந்தனர். அவர்கள் மேலும் சம்பத் பேசவிடாமல் தடுக்க நினைத்துக் கல்லெறிந்தனர். சம்பத்தை நோக்கிக் கூரிய கல்லொன்று பறந்து சென்றது. சம்பத் இப்பக்

கமும், அப்பக்கமும் அசைந்தபடியே பேசிக்கொண்டிருந்தார். கயவர் வீசிய கல், குறி தவறிவிட்டது! சம்பத் மீது கல் விழவில்லை! மேடைக்கருகில் ஒருவர்! வயது சென்றவர்! சம்பத் என்ற மேகம் பொழியும் சொற்பொழிவு என்ற மழையில் நனைந்து மகிழும் செடியாக இருந்தார் அவர்! சம்பத்மீதுகுறிபார்த்து வீசியெறியப்பட்ட கல், அவர் தலையில் விழுந்தது! மறு நிமிடம் ஐயோ என்றலறினார் அவர். தலையிலிருந்து இரத்தம் வேகமாக வெளியே வந்தது. உடனே கூட்டத்தில் குழப்பமேற்பட்டது! 'கல் வீசுகிறார்கள்! கல் வீசுகிறார்கள்!' என்றனர் சிலர். சம்பத் பேசுவதை நிறுத்தி விஷயத்தை அறிந்தார்.

இதற்குள் கூட்டத்திலிருந்த சிலர் கலைந்து செல்லத் தொடங்கினர். கல் வந்த திசையை நோக்கி சிலர் கல் வீசிய கயவர்களைப் பிடிக்கப் பாய்ந்தனர். அதனால் கூட்டத்தில் குழப்பம் அதிகரித்தது. கூட்டம் கலைந்து விடும், நடக்காது என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் சம்பத்தின் குரலொலி, கூட்டத்தின் பெருஞ் சப்தத்தையும் மீறிக்கொண்டு கேட்டது!

"தோழர்களே! கயவர் வீசிய கல் ஒருவரின் மண்டையைத் துளைத்துவிட்டது விஷயம் அதுதான். யாரும் நகராதீர்கள். நாம் அவர்கள் கல்லுக்குப் பயப்படுபவர்களல்ல! யாரும் செல்லாதீர்கள்! நான் பேசுகிறேன்! இன்னும் வெகு நேரம் பேசுகிறேன்! அசையாமல் நின்று பேசுகிறேன்! கல் வீசுபவர்கள் நன்றாக நிறுத்தி நிதானமாக குறிப் பார்த்து வீசட்டும். சம்பத் சளைத்தவனல்ல" என்றார்.

அவர் குரல் இடியென முழங்கியது! நகர்ந்த கால்கள் நின்றன! கலைந்த மனிதர் மீண்டும் வந்தனர். கிளம்பிய கூச்சல் அடங்கியது! சம்பத் பேசினர்! பேசினர்! பேசிக்கொண்டேயிருந்தார். கூட்டம் கலைந்துவிடும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாந்தார்கள். கூட்டம் மேற்கொண்டு அரை மணிக்குமேல் நடந்தது. சம்பத் கூட்டத்தை வெற்றிகரமாக, கல் வீசியவர்கள் வெட்கப்படும்படி நடத்தி, முடித்துக் கொடுத்தார். சம்பத் 'கல்லால் அடியுங்கள் கவலைப்படமாட்டேன்' என்று களிப்போடு பேசினர். கற்கள் வீச கயவர்களுக்குத் துணிவில்லை! சொல்லுக்குச் 'சொல் வீச துணிவிருந்தால்! இவ்விவம் செய்வார்களா'? என்று கேட்டார். அந்தத் துணிவில்லாதக் காரணத்தால் கலகம் விளைவிக்க விழைந்தோர் சொல்லும் வீசாமல் கல்லும் வீசாமல் கலைந்து சென்றனர்.

மறு நாள் காலை செய்தித் தாள்கள் தேர்தல் முடிவுகளைத் தாங்கி வெளிவந்தன. முதலமைச்சர் குமாரசாமிராஜா அவர்களின் தொகுதி தேர்தல் முடிவும் வந்திருந்தது. முதலமைச்சர் படுதோல்வியடைந்தார். முன்னிரவு கூட்டத்தில் சம்பத் கூறியது உண்மையாயிற்று! அவர் யூகம் நூற்றுக்கு நூறு சரியாயிற்று! இரவு சம்பத்தின் பேச்சையும், காலையில் முதலமைச்சரின் முடிவையும் அறிந்தோர் அதிசயப்பட்டனர்.

சம்பத் சிறந்த பேச்சாளர் என்று அறிமுகமாவதற்கு முன்னல், நல்ல பேச்சாளர்களாக விருந்த சிலரைவிட மிக மிக நன்ருகப் பேசும் திறமைப் பெற்றவர். அவர் இளமையில் பேச ஆசைப்பட்டதை, லால்

குடியில் நடந்த இரண்டாவது மாநாட்டில், சம்பத்தை மாநாட்டின் தலைவராக வழி மொழியவந்த அ. பொன்னம்பலனர் அழகாகக் குறிப்பிட்டார். அவர் நினைவிலிருந்த பழைய நிகழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டினர்.

சம்பத் அப்போது பிள்ளைக்கனியமுது, பேசும் பொறி சித்திரம்! பொன்னம்பலனர் போன்ருேர் அள்ளியணைத்திட ஆடிவந்த அருமைக் குழந்தை! அப்போது பெரியாருடன், பொன்னம்பலனரும் அவர் தம் தோழர்களும் பகுத்தறிவு பிரச்சாரம் செய்து வந்தனர். அந்தக் காலம், பகுத்தறிவு மணம் பரவும் ஆரம்ப காலம்! மூடநம்பிக்கைகளுக்கு மக்கள் முழுக்குப்போடத் தொடங்கிக்கொண்டிருந்த காலம்!

ஆகையால் பகுத்தறிவு பிரச்சாரத்திற்குச் செல்லும் சொற்பொழிவாளர்களுக்கு, பல இடங்களில் கல்லும், மண்ணும் கிடைத்ததைப்போல, சில விடங்களில் மலர் மாலைகளும் கிடைத்தன.

கூட்டத்தில் போடும் மலர்மாலைகளை பொன்னம்பலனரும், மற்றவர்களும் பத்திரமாக எடுத்துக்கொண்டு பெரியார் வீட்டுக்கு வருவார்களாம். சம்பத் சிறுவனக இருந்தாலும், மற்றவர்கள் சொற்பொழிவுகளுக்குச் செல்வதையும், கைத்தட்டல் பெறுவதையும், மலர் மாலைகளுடன் திரும்புவதையும் அறிந்திருந்தார். அவர், மற்றவர்கள் கூட்டத்திலிருந்து மாலைகளுடன் திரும்பி வந்ததும், அவர்களிடம் நானும் பேசப்போகிறேன் என்று கூறுவாராம்.

அந்தச் சின்னஞ் சிறு குழந்தைப் பேசப் போகிறேன் என்று கூறியதும் மற்றவர்கள் அடையும் ஆனந்

த்தைக் கூறியா தெரிந்துகொள்ளவேண்டும்? உடனே ஒருவர் சம்பத்தைத் தூக்கி அருகிலிருக்கும் நாற்காலி அல்லது மேஜை மேல் நிற்கவைப்பாராம். மற்றொருவர் கூட்டத்திலிருந்து கொண்டுவந்த மாலையைச் சம்பத் திற்கு அணிவிப்பாராம். உடனே பேச்சாளர் சம்பத் பேசத் தொடங்குவார். மற்றவர்கள் அதை ஆவலோடு, ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

சம்பத் "தலைவர்களே, பெரியோர்களே தாய்மார் களே வணக்கம்" என்று கூறுவாராம். கூறி முடித்த தும் அவர் "என்ன இது நான் பேசி முடித்துவிட் டேன், நீங்கள் கைத் தட்டவில்லையே" என்று கூறுவா ராம். உடனே மற்றவர்கள் மகிழ்ச்சியோடு கைதட்ட, சம்பத்தின் முகம் மலருமாம்.

இதைப் பொன்னம்பலனார் லால்குடி மாநாட்டில் குறிப்பிட்டார். மேலும் பேசுகையில் "சம்பத் குழந் தையாக இருந்தபோது பேசுவதைக் கேட்ட நாங்கள், பெரியவனானால் சம்பத் பெரிய பேச்சாளராக வேண்டும் என்று கனவு கண்டோம்! அது நினவாகிவிட்டது" என்று குறிப்பிட்டார்.

சிறு வயதில் சம்பத் பேச விரும்பினார்; மலர்மாலை யைச் சூட்டிக்கொள்வதில் மகிழ்ச்சியடைந்தார். பேசிய பிறகு கைத் தட்டவேண்டும் என்று விரும்பினார். சிறு பருவ ஆசை! அந்த ஆசை இன்று பூரணமாக நிறை வேறிவிட்டது. மக்கள் அவர் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள்; பேசினால் மணிக்கணக்காக உட் கார்ந்துகொண்டு கேட்கிறார்கள். அவருக்கு மலர் மாலை

கள் சூட்டி மகிழ்கிறார்கள். அவர் பேசும்போது ஆர்வத் துடன் மக்கள் கைத் தட்டுகிறார்கள்!

சம்பத் எதையும் நன்கு ஆராய்ந்து, பின்னல் என்ன ஏற்படலாம் என்பதை யூகித்தறிந்து பேசுவதில் வல்லவர். காங்கிரஸ் என்றால் கள்ள மார்க்கெட் காரர்கள் நிரம்பிய இயக்கம், கண்யமற்றவர்கள் கணக்கிலர் உள்ள ஸ்தாபனம் என்ற பெயரை, அவ்வியக்கம் பெற்றுவிட்ட பிறகு காங்கிரஸின் ஊழல்கள் மேடையில் அம்பலப்படுத்தப்பட்டன. காங்கிரஸிலிருந்த சாதாரண அங்கத்தினர்களிலிருந்து, பெரிய தலைவர்கள்வரை செய்யும் ஊழல்கள், எடுத்து விளக்கப்பட்டன.

ஆனல் பெரும்பாலான பேச்சாளர்கள் இந்தியாவின் முதலமைச்சர் ஜவஹர்லால் நேருவை மட்டும் விட்டு விட்டே பேசுவர். காங்கிரஸில் உள்ள ஒரே கண்யவான் அவர்தான் என்று காங்கிரஸை எதிர்க்கும் சிலரும் பேசுவர். சம்பத் அவர்கள்தான் ஆசியாவின் ஜோதியின் கண்யத்தின் தன்மையை மக்களுக்கு நன்கு விளக்கினர். நேரு கண்யவான் அல்ல; நடப்பதைத் திரித்துச் சொல்லும் இரட்டை நாக்கினர் என்றார். பிற நாட்டு மாணவர்களிடம் இந்தியாவில் எழுத்துரிமையையும் பேச்சுரிமையையும் மறுக்கப்படவில்லை, பறிக்கப்படவில்லை என்று புளுகியதை விளக்கிக் காட்டினர். அவர் "காங்கிரஸில் உள்ள ஒரே கண்யவான், நீதி தவருதவர் உண்மையை உரைப்பவர், காந்தியாரின் வாரிசாகிய நேருதான் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தால் அதை மறந்து விடுங்கள். நேரு நீங்

கள் நினைப்பதைப்போல கண்யமானவரல்ல!'' என்று அழுத்தம் திருத்தமாக கூறினார்.

லால்குடியில் நடந்த திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது அரசியல் மாநாட்டிற்கு அவர் தலைமை வகித்தார். அப்போது நேரு சர்க்காரின் ஊழலையும், நேருவின் வெளிநாட்டுக் கொள்கையைப்பற்றியும் பேசினார். முடிவில் "காங்கிரஸில் உள்ள கண்யமற்றவர்களில் முதல்வர் யாரென்று கேட்டால் நான் நேரு அவர்களைத்தான் குறிப்பிடுவேன்'' என்று கூறினார். அவர் கூறியது முழுக்க முழுக்க உண்மை, சிறிதுகூட தவறில்லை என்பதை சமீபத்தில் சென்னைக்கு வந்த நேரு நிரூபித்துவிட்டார்.

சம்பத் வெறும் பேச்சாளர் மட்டுமல்ல சிறந்த எழுத்தாளருங்கூட. அவர் 'புது வாழ்வு' என்ற பத்திரிகையின் ஆசிரியராக விருந்தார். ஆனால் அந்தப் பத்திரிகை இடையில் நின்றுவிட்டது. சம்பத் பல்வேறு இதழ்களில் கருத்துச் செறிந்த கட்டுரைகள் பலப்பல தீட்டியுள்ளார்.

அறிஞர் அண்ணாதுரை தீட்டிய 'சந்திரமோகன்' நாடகம் பிரசித்திப் பெற்றது. அதைக் கண்டு மகிழ்ந்தவர் மிகப் பலர். அதில் வரும் மறக்க முடியாத கதாபாத்திரங்களில் சிவாஜியும் ஒருவர். சிவாஜியை 'மலை எலி' யாகச் சரித்திரங்களில் கண்டிருப்போம். மராட்டி மண்டலத்தை சிருஷ்டித்த சிறந்த வீரரென அறிந்திருப்போம். ஆனால் அவர் அரியாசனமேற ஆரியரின் தாளேந்த வேண்டியிருந்ததை வரலாற்று நூல்களில் கண்டிருக்கமாட்டோம். பெரிய மண்டலத்தை உண்

டாக்கிய சிறந்த வீரனுக்கு ஆளும் உரிமையில்லை என்ருல் அவன் மனம் எப்படியிருக்கும்? அவன் முடிசூட்டிக்கொள்ள, வேண்டா வெறுப்புடன் ஆரியரின் அடி வணங்கினுன். இந்த உணர்ச்சிகரமான பாத்திரத்தை ஏற்று நடிக்க திறமைமிக்க நடிகரால்தான் முடியும்.

அந்த சிவாஜி வேடமணிந்து நாடகத்தில் தோன்றி நன்கு நடித்து பெருமைபெற்றவர்தான். இன்றைய திரைவானில் ஈடுயிணையுமில்லாத தாரகையாக ஜொலிக்கும் சிவாஜி கணேசன். அதே சிவாஜி வேடத்தை ஏற்று நன்கு நடித்துப் புகழ் பெற்ருர் சம்பத்! ஆச்சரியப்படவேண்டாம், சம்பத் ஒரு சிறந்த நடிகர்தான்! ஆஜானுபாகுவான அவர் சிவாஜி வேடத்துடன் மேடையில் தோன்றும்போது, மாண்ட சிவாஜியே நேரில் வந்ததைப்போல இருக்கும். மேடையில் வசனங்களை நன்ருகப் பேசி, சிவாஜியாகவே மாறிவிடுவார் சம்பத்! நாடகத்தின் கடைசி கட்டத்தில், சந்திரமோகனிடம் அவனை வாளைத் தொடக்கூடாது, நாட்டைவிட்டுப் போகும்படி சொன்னதற்கு காரணம் கூறுமிடத்தில் அவர் நடிப்பு மிக நன்ருக இருக்கும். அதைப்போலவே விருந்துக்குவந்தவர்கள், சிவாஜி தாழ்ந்த குலம் என்று பேசிவிட்டுச் சென்றதை கேட்ட சிவாஜி தனிமையில் கோபத்தில்—ஆத்திரத்தில் தனக்கெதிரேயுள்ள சாமான்களைத் தட்டிவிடும் கட்டத்தை நம்மால் மறக்கவே முடியாது!

சம்பத் எதையும் திறம்பட செய்து முடிப்பார் என்பதற்கு அவர் நடிப்பு ஒரு நற்சான்று!

இவ்வளவு பெருஞ் சிறப்புகளைக் கொண்டவர் தான்தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள். தோழர் சம்பத் ஓர் கண்ணியம் நிறைந்த பேச்சாளர், அவர் பேச்சில் அரசியல் நாகரிகம் நிச்சயமாக இருக்கும்.

அவர் ஓர் சிறந்த நடிகர். சந்திரமோகன், சிவாஜி போன்ற வேடங்களை தாங்கி மிகமிக நன்றாக நடிக்கும் ஆற்றல் உடையவர்.

இவர் ஓர் சிறந்த எழுத்தாளர். அவர் பேச்சிலே இருக்கும் முடுக்கும் கம்பீரமும் எழுத்திலேயும் இருக்கும்.

அறிஞர் அண்ணா அவர்களை ஆரிய மாயை வழக்கின் முடிவில் சிறையிலே அடைத்து விட்டனர். அதனை தன் எழுத்தின் மூலம் தோழர் சம்பத் கண்டித்திருக்கிறார். அந்த கண்டனையில் அவருடைய எழுத்துக்கள் எப்படி நர்தனம் புரிகின்றன என்பதை நீங்களே படித்துப் பாருங்கள்.

"அண்ணா சிறைப்பட்ட நாள், நம் கழகத்தின் முதல் ஆண்டு முடிந்து இரண்டாவது ஆண்டு துவங்கும் நாள்!

68244

சென்ற ஆண்டு செப்டம்பர் 17 திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கப்பட்டது.

இவ்வாண்டு செப்டம்பர் 18ந் தேதி, இரண்டாம் ஆண்டின் துவக்கநாள், அண்ணா சிறைப்பட்டார்!

கிடைத்தற்கரிய பெருமை. நம் முயற்சி பலன் தரத் துவங்கிவிட்டது என்பதை, அண்ணா சிறைபட்டச்

சேதியைவிட, வேறெது இவ்வளவு திட்டவட்டமாக நமக்கும் உலகிற்கும் அறிவிக்க முடியும்?

ஒரு ஆண்டு! 500க்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் முளைத்தன. ஏழு மாவட்ட மாநாடுகள் கூடின. கோயில் பட்டியில் கூடிய செயற்குழு, மத்திய சர்க்கார் மந்திரி கள் திராவிடத்திற்கு வரும்போது கருப்புக் கொடி காட்டி பகிஷ்கரிக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறை வேற்றியது. தீர்மானம் நிறைவேற்றிய 10 நாட்களில் சென்னை வந்த மத்திய சர்க்காரின் ரேடியோ மந்திரி திவாகருக்கு சென்னைத். திராவிடர் பல்லாயிரவர் சொரணையற்ற சோற்றுத் துருத்திகளுக்கு உணர்ச்சி உண்டாகும் முறையில், கருப்புக் கொடி காட்டினர், 13-ந் தேதி மகிழ்ச்சிக்கூட்டம் சென்னையில் நடைப் பெற்றது.

அண்ணா சிறைசெல்லும் முன்னர் பேசிய கடைசி பொதுக்கூட்டம் அதுதான். 17 ந் தேதியும் வந்தது திராவிடத்தின் பெரும் நகர்களில் ஆண்டு விழா பேருணர்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. 18-ந் தேதி காலை உதித்த கதிரவன் அண்ணாவையும் நாம்கூட இருந்த காலத்தில் உதிர்த்த பொன் மொழிகளுக்காக தண்டனைபெற்ற பெரியாரையும் திருச்சி சிறைக்குள் முறையே 12-ம் நெம்பர், 13-ம் நெம்பர் அறைக்குள் தள்ளிவிட்டே மறைந்தான்!

எதிர் பார்த்தது நிகழ்ந்தே விட்டது! அண்ணா சிறைக்குள்! நாம் வெளியில்! நம் பொறுப்பு மகத் தானது.

அமைதி குன்றாமல் ஆனால் ஆர்வம் குறையாமல் ஆத்திரப்படாமல் ஆனால் வளரும் உறுதியோடு நம் பணியை நாம் தொடருவோம். பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகிய அடிப்படை உரிமைகள் இந்த சர்க்காரின் காலடியில் மிதிபட்டு அழிவதை மக்களுக்கு எடுத்துச் சொல்லுவோம். மந்தபுத்தியோடு போட்டிபோடும் மண்டைக் கர்வம் படைத்த இந்த சர்க்கார் உணரவேண்டும், அண்ணா சிறையில் உள்ளபோது, வெளியில் இருந்தபோது இருந்ததைவிட கட்டுப்பாடும், பிரச்சாரமும் கட்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள உறுதியும், பல மடங்கு அதிகப்பட்டிருக்கிறது என்பதை. அவ்வகையில் வளருவோம், செயலாற்றுவோம்!

பாசீசம் தலைவர் உருவில் வந்தபோதும் போராடி வெற்றி கண்டவர்கள் நாம். ஆகவே ஆளவந்தாருக்கு புத்தி வரும் வரையில் நாம் அஞ்சாமல், அயராமல், தயங்காமல், தளராமல் கிளர்ச்சி செய்துக் கொண்டே தான் இருப்போம். இதை ஆட்சியாளர் உணரும் நாள் வெகுதொலைவில் இல்லை.

கடைசியாக ஆட்சியாளருக்கு ஓர் எச்சரிக்கை. எங்கள் இதய பீடத்தில் ஆட்சி செய்யும் அண்ணாவை, நடமாடும் அண்ணாவாக, உயிரோடு ஒப்படைத்திருக்கிறோம். எங்களிடம் திருப்பித் தரும்போது சற்று ஏறுமாறுகள் ஏற்பட்டிருந்தாலும்...நான் சொல்ல வேண்டியதில்லை, நீங்கள் தந்து தீரவேண்டிய விலை என்ன என்பது விளக்க வேண்டிய ஒன்று அல்ல.

அண்ணா வாழ்க! அடக்குமுறை ஒழிக!!

* * *

நமது திராவிடர் தளபதி தோழர் சம்பத் அவர்கள் பிறந்து வளர்ந்த கதையை ஓரளவு விளக்குவோம் சுருக்கமாக:—

1926-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் நாள் பிறந்தார். இவருக்கு இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உண்டு.

இவருடைய தந்தையார் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் பெரியார் இராமசாமி அவர்கள் அண்ணர்.

பள்ளிப் பருவத்தில் நன்ருகக் கருத்தூன்றி படித்தார். 1942 ல் இருந்து 1944 வரை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்ருர். இவருடைய படிப்பு இண்டர் வரையில் நீடித்தது.

1946-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ம் நாள் திருப்பத்தூர் G. சாமி நாயுடு B. A. B. L. அவர்களுடைய மகளார் திருமதி சுலோசன அம்மையாரை மணந்தார்.

1947-ம் ஆண்டு ஈரோடு முனிசிபல் கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு 1952-ல் மறுபடியும் அவரே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் உண்டு.

பெரியார் இராமசாமி, அறிஞர் அண்ணு முதலியவர்களுடன் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சிறை சென்றபோது சென்ருர்.

மறுபடியும் திராவிட முன்னேற்றக் கழகம் கருப்புக் கொடி காட்டிய நிகழ்ச்சியில் ஆச்சாரியாருக்கு காட்டியபோது கைது செய்யப்பட்டார்.

தோழர் சம்பத் அறிஞர் அண்ணாவின் அருமைத் தம்பிமார்களில் முக்கியமானவர். அவர் சென்னையில் ஆச்சாரியார் வீட்டின் முன்னர் மறியல் செய்யும் போராட்டத் தலைவராக அண்ணா அவர்களால் நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் அங்கு செல்லுமுன் அரசாங்கம் கைது செய்துவிட்டது. பின்னர் வழக்குத் தொடர்ந்தது, அதன் முடிவு மூன்றுமாதம் கடுஞ் சிறைவாசம் பெற்றார்.

தோழர் சம்பத் திராவிடர்களின் உள்ளங்களிலே ஆழப் பதிந்தவர். அவருடைய தொண்டை திராவிட நாடு எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. திராவிட நாட்டிற்குக் கிடைத்த மாணிக்கங்களில் ஒருவர் தோழர் சம்பத் அவர் சீக்கிரம் வெளிவந்து அவர் பிரிவால் வாடும் மக்களுக்கு ஆறுதல் அளிப்பார்.

வாழ்க திராவிடம்.

# கே. கோவிந்தசாமி

அன்று காலை கையிலே ஒரு சிறு கருப்புத் துணி யுடன் தி. மு. க. வீரர்கள் வரிசை வரிசையாய் அணி வகுத்துச் சென்றனர். ஆம்! களங்கமற்ற உள்ளத்துடன் சென்றனர். சென்னையில் பல பகுதிகளில் இருந்து வந்த தோழர்கள், தோழியர்கள், அறிஞர்கள் அனை வரும் சென்னை கோட்டையை நோக்கி நடந்தனர்.

கோட்டைக்கருகில் அணிவகுத்து நின்றனர். கையிலே கருப்புக் கொடிகளை வைத்துக் கொண்டிருந்த னர். 'திரும்பிப்போ' என்ற ஒலிகளை எழுப்பிய வண்ணம் அமைதியாக நின்றிருந்தனர் ஓர் வடநாட்டு அமைச்சர் வரவை நோக்கி.

ஆனால், அந்த இடத்தில் ஏராளமான போலீஸ் பாதுகாப்பு இருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் எழுப்பிய ஒலி அவர்கள் காதுகளைத் துளைத்து சென்றது.

இன்னும் இரண்டொரு நிமிடங்களில் வரப் போகிறார் டில்லியில் அமைச்சர் வேலை பார்க்கும் ஆச்சாரியார் அவரைத் திரும்பிப்போ என்று கூறி கருப்புக் கொடி காட்டப் போகின்றனர்.

திடீரென்று தடியடி பிரயோகம் நடைபெற்றது ராஜாஜி வரவில்லை. போலீஸார் தடி கொண்டடித்தார்

அணிவகுத்து நின்ற தோழர்களை - தோழியர்களை - ஆம்! போலீஸ் மிகக் கடுமையாகத் தாக்கியது. பல அறிஞர்கள் மண்டைகள் பிளந்தன — தாய்மார்கள் கீழே தள்ளப் பட்டு தடியடிக்காளாயினர், குழந்தைகள், மாணவர்கள் - நல்லவர்கள்—முக்கியஸ்தர்கள் அனைவரையும் அடித்துத் துன்புறுத்தி போலீஸ் லாரியில் ஏற்றினர்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த போது செயலாளர் இல்லை. சில முக்கிய விஷயங்களை கவனித்துவிட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகிறார் ஆனல் தி. மு, கழகத் தோழர்கள் ஆட்டையும், மாட்டையும் அடித்து விரட்டுவது போல துரத்தப்படுவது கண்டார். அவர் மனம் கலங்கியது. அவர் ஓடவில்லை நேராகச் சென்றார் போலீஸ் அதிகாரி இருந்த இடம் நோக்கி சற்றும் அஞ்சாமல் "ஒரு குற்றமும் செய்யாத எங்கள் தோழர் களை ஏன் இவ்விதம் மிருகத் தனமாக அடித்து விரட்டு கின்றீர்" என்றார். அதற்கு அதிகாரி "நீர் யார்" என்றார். "நான் இந்த மாவட்டத்தின் பொறுப்புள்ள செயலாளன் என்னை வேண்டுமானல் கைது செய்யுங்கள் ஏன் ஒரு குற்றமும் அறியாத அவர்களை அடிக்கின்றீர் இது முறையல்ல" என்று நிமிர்ந்த நெஞ்சத்துடன் கூறினர். அவர்தான் தோழர் கே. கோவிந்தசாமி. அவர்கள் சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர். செயலாளர் என்ற சொல்லுக்கு இலக்கணமாக சுட்டிக்காட்ட நமக்கு ஒருவர் தேவை யென்றல் அவர் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் தான் சென்னை மாவட்டத்தைப் பொறுத்த வரையில்.

தோழர் கே. கோவிந்தசாமி எங்கே—என்று பிறந்தார்? அவர் தாய் தந்தையர் பெயரென்ன?

என்பனவற்றை நாம் ஆராய்வதை விட அவருடைய நல்ல தன்மைகளைக் கண்டு பழகிக் கொள்வது மிகவும் நல்லது.

தோழர் கோவிந்தசாமி—பெரியார் இராமசாமி அவர்களால் மிக மிக விரும்பப்படும் ஒருவர் என்ருல் போதும் அவரைப் பற்றிப் புரிந்து கொள்ள இன்னும் சந்தேகம் இருப்பவர்களுக்கு அவர்தான் பெரியாருடைய பொருளுக்குப் பாதுகாவலராக இருந்துபணியாற்றியவர் என்று கூறினல் அவருடைய முழு ஒழுக்கப் பண்பை யும் கூறிவிட்டதாகும்.

தோழர் கோவிந்தசாமியை பெரியார் நீக்கிவிட வில்லை. தோழர் கோவிந்தசாமி பெரியாரிட மிருந்து விலகினர் பொருந்தாத் திருமணத்திற்கு பிறகு அப் போதும் பெரியார் 'வேண்டாம்' என்றும் மறுத்தும் கொள்கைக்காக பெரியார் அவர்களை விட்டு நீங்கிய கொள்கை வீரர் கே. கோவிந்தசாமி அவர்கள்.

தோழர் கோவிந்தசாமி அவர்கள் பல்லாண்டுக ளாக திராவிட இயக்கத்தில் இருந்து பணியாற்றி வந் தார். திராவிடக் கழகமாக இருந்த போது சென்னை மாவட்ட செயலாளராகவும், விடுதலையில் பணப் பொறுப்பேற்று பணியினையும் செய்து வந்தார்.

ஒரு சிலர் மேடைகள் மீது ஏறி பேசி தன் பேச்சால் மக்களிடம் பெயர் பெறுகின்றனர். ஒரு சிலர் தம் கருத்தை எழுதி மக்களிடம் மதிப்பைப் பெறுகின்ற னர். ஆனல் இந்த இரண்டு முறையையும் தோழர் கோவிந்தசாமி கையாள வில்லை. உண்மையாக உழைத்

தார். நாணயமாக நடந்து கொண்டார். இந்த இரண்டுமே இவரை நாட்டிற்கு அறிமுகப்படுத்தின.

தோழர் கோவிந்தசாமி என்ருல் நாணயஸ்தர் என்று பொருள்—கடமையை எந்தக் காரணத்தாலும் கைவிடாமல் செய்து காட்டும் திறம் உடையவர் என்று பொருள்—எடுத்துக் கொண்ட வேலையை செய்து முடித்துக் காட்டிய பின்னரே உறங்கும் எண்ணம் கொண்டவர் என்று பொருள். சொல்வதைத் தான் செய்வார் செய்வதைத்தான் சொல்வார் என்று பொருள்.

இவர் மிகமிகக் கண்டிப்பான பேர்வழி; இந்தக் கண்டிப்பான முறையைக் கையாண்டதால் ஒரு சிலர் அவரை விரும்புவதில்லை. என்ருலும் அவரிடமிருந்த அந்தக் கண்டிப்பு அவரை ஓர் உயர்ந்த மனிதராக்கியது. எந்த வேலையாயினும் தானே நேரில் சென்று முடிப்பதில் அவருக்கு இணை அவர்தான்.

இத்தகைய நல்லவரை—உத்தமரை—முதன் முதலாக செயலாளராகப் பெற்ற பெருமை சென்னை மாவட்டத்துக்கே கிடைத்தது. இவர் சென்னை மாவட்டத்தின் செயலாளர் என்ற ஒரே ஒரு பதவிதான் ஏற்ருர் என்ருலும், அவர் தன்னுடைய வேலையைப் பார்த்து விடுவதுடன் நின்று விடுவதில்லை.

துணைச் செயலாளர்கள்—விளம்பரச் செயலாளர் பொருளாளர்—கமிட்டி உறுப்பினர் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் தனி மனிதனுக நின்று அல்லும் பகலும் செய்து வருவார். அவர் பணி வியக்கத்தக்க முறையில் அமையும். இந்த காரியத்தை இந்த இடத்தில்

இத்தனை மணிக்குச் செய்ய வேண்டுமென்றால் கட்டாய மாக அதனை செய்து முடிப்பார்.

சென்னை திராவிடர் முன்னேற்றக் கழக முதலாவது மாநாடு நடை பெற்றபோது அதன் வரவேற்புக் குழுச் செயலாளராக இருந்து பணியாற்றினர். அப்போது அவர் ஆற்றிய அந்த அரும் பணியை பக்கலில் இருந்து பார்த்தவர்கள்—நடுநிலைமையாளர்கள் ஆச்சரியப்படுவார். ஒருசில புகழ் விரும்பிகள் அவரைப் பற்றி ஏதாவது உளறிக் கொட்டும் அதுபற்றி நமக்கு கவலையில்லை.

சென்னை மாவட்டத்தின் முழு சக்தியை ஒரே உருவத்தில் காண வேண்டுமென்றால் அது தோழர் கோவிந்தசாமி அவர்களின் உருவத்தில் பார்த்து விடலாம். தோழர் கோவிந்தசாமி அவர்களைப் பற்றி ஏதேதோ வானம் அளாவப் புகழ்வதாக யாரும் கருதி விட வேண்டாம். அவருடன் இருந்து, பழகி, பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் என்னைப் பயன் படுத்திக் கொண்ட முறை—அவர்களுடைய கூர்மையான புத்தி நுட்பம் இவ்வளவும் மிக நெருக்கி யிருந்து பார்த்துப் பழகியவன் ஆகவே உண்மையைச் சொல்லவேண்டும் என்று கூறுவதை விட இன்னும் எவ்வளவோ கூட்டிக் கூற வேண்டும் என்று கூறுவது தான் சரியானது.

தோழர் கோவிந்தசாமி அவர்கள் இயக்கத்திற்காக உழைத்து தன்னைத்தானே நாசமாக்கிக் கொண்டவர் 104 டிகிரி ஜுரம் அடித்துக் கொண்டிருக்கும். டாக்டர்

அசையக் கூடாது என்று ஆணையிட்டு இருப்பார். ஆனல் கோவிந்தசாமி அவர்கள் ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டு ஒரு மூட்டை நிறைய கருப்புத் துணிகளை வெள்ளைப் பையில் நிரப்பிக் கொண்டு ஒவ்வொரு கிளைக் கழகத்திற்கும் சென்று நாளை வரும் மந்திரிக்குக் காட்ட கொடுத்துவிட்டு வருவார். இவருடைய வருகைக்காக இவருடைய வாழ்க்கைத் துணைவியார் வீட்டு வாயிலே காத்துக் கொண்டிருப்பார். இரண்டு மூன்று பேர் பிடித்து உள்ளே அழைத்துச் சென்று படுக்க வைத்தால் நிம்மதியாகப் படுக்க மாட்டார். "நாளைக்கு வரும் மந்திரிக்கு வெற்றிகரமாக கொடி காட்ட வேண்டும்" நானும் நிச்சயமாக வருவேன்" என்று கூறுவார்.

இவருக்கு தன் உயிர் பெரிதாகத் தெரிந்ததில்லை. தொண்டு கடமை இவைகளைத் தான் தன் உயிர் என்று கருதி இருந்தார். இதனை அவரைப்பற்றி பின்னல் பேசுவோரும் உணர்வார்கள்.

சென்னை மாவட்டத்திற்கு ஒரு தூண் போன்றவர், அவர் கமிட்டிக் கூட்டங்களை நடத்தும் முறையே ஒரு தனியானது. காரசாரமாக விவாதங்கள் நடைபெறும் போது அவர் அந்தச் சிக்கல்களை மிகவும் சாமர்த்திய மாகத் தீர்த்து வைப்பதில் சமர்த்தர்.

பண விஷயத்தில் தோழர் கோவிந்தசாமி அவர்கள் நடந்துகொள்ளும் முறை மிக மிக உயர்ந்தது, ஆம்! அவர் நிதி மந்திரியாகத் தகுதியுடையவர் என்று கூறினல் மிகையாகாது: கழகப் பணம்; அதனைக் கட்டிக்

காக்கும் முறை இவைகளை தோழர் கோவிந்தசாமி அவர்களிடமிருந்து எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டும். கழகப் பணம் வீணுக செலவாக அவர் ஒருக்காலும் ஒப்பமாட்டார். எந்த வேலையானுலும் நடந்தே சென்று முடிப்பார். அவசரமான வேலைகளானுல் அவர் டாக்ஸியில் போவார் அதற்கு தன் சொந்தப் பணம் கொடுப்பார். கழகப் பணத்தை தொடார்.

அவர் ஒரு தடவை என்னிடம் கூறியது எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. "நான் பணத்தை எப்படி பாதுகாக்கிறேன் என்ருல் ஓடுமூடிய முழு தேங்காயை ஒரு நாய் கட்டிக் காப்பதுபோல் காப்பாற்றுகிறேன்" என்ருர். அதாவது நாய் ஓடுள்ள தேங்காயை கடித்து உண்ணுது, அதுமட்டுமல்ல அந்தத் தேங்காயை வேருெவர் எடுத்துச் செல்லவும் விடாது. அதைப்போலவே கழகப் பணத்தைக் கட்டிக் காப்பதாகக் கூறினுர். இந்த ஒரு விஷயத்தில் அவரை வெறுக்கும் ஒரு சிலர் கூட மறுக்கமாட்டார்கள்.

கடமைகளை அவர் மிகவும் விரும்பினுர். உண்மையான நல் எண்ணத்துடன் பாடுபடும் கழகத் தோழர்களுக்கு உண்மையான தோழரானுர். ஆனுல், புகழுக்காகப் பாடுபடுபவர்களையும், பணத்திற்காக ஆசைப்பட்டு இயக்க வேலையில் ஈடுபடுபவர்களையும் அவர் அலட்சியப்படுத்தியே வந்தார். அதுமட்டுமல்ல, கடமைகளில் தவறிவிட்டால் யாராக இருந்தாலும் அவர் மன்னிக்கமாட்டார். நிச்சயமாக கண்டிப்பார். அவர்கள் செய்த தவறுகளை கண்ணியமான முறையில் எடுத்துக் கூறித் திருந்திக்கொள்ளுமாறு புத்தி புகல்வார்.

இன்னும் ஓர் அரிய பண்பு தோழர் கோவிந்தசாமி அவர்களிடமுண்டு. அவர் யாரையும் விரோதிப்பதில்லை. பகைவர்களையும் அன்புடன் பார்த்து பேசும் பண்பினர் நண்பர் தோழர் கோவிந்தசாமி அவர்கள்.

தோழர் கே. கோவிந்தசாமி அவர்களுடைய அருங்குணத்தை முழுதும் உணர்ந்தவர் நமது அருமை அண்ணா ஆகவே அவரிடம் மிகவும் அன்பாக இருந்தார். அவரிடம் அவர் வைத்திருந்த நம்பிக்கை மிக மிக அதிகம். அதைப்போலவே தோழர் கோவிந்தசாமி அவர்கள் அறிஞர் அண்ணா 'எள்' என்று கூறுவதற்கு முன்னர் எண்ணெயாகவே வந்து எதிர் நிற்பார்.

தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் செயலாளராக இருந்து நடத்திய சென்னை மாவட்ட மாநாட்டின் போது விற்கப்பட்ட எல்லா டிக்கட்டிற்கும் கவுண்டர் பையில் வைத்தார். ஒவ்வொரு வழியிலும் சீல்வைத்த பெட்டிகளை வைத்தார். எல்லா கவுண்டர் பையில் டிக்கட்டுகளும் அந்தப் பெட்டியில் போட ஏற்பாடு செய்தார். பின்னர் வரவேற்புக் குழு நடைபெற்றபோது உறுப்பினர்களிடம் அந்த சீல் வைத்தப் பெட்டிகளை பரிசோதித்து டிக்கட்டுகளை எண்ணச் செய்து சரிபார்க்கச் சொன்னார். ஆம். அதிலே எந்தவிதமான காம்பிளிமெண்டரி, அல்லது கள்ளத்தனத்திற்கு ஏதுவானவைகள் எதுவும் இல்லை. இவ்விதமாகத் தன் பொறுப்புகளை நன்கு உணர்ந்து செயலாற்றும் நடுநிலைமையாளர். மாநாட்டு செலவு போக 3000 ரூபாய் மத்திய கழகத்திற்கு கட்டிடம் வாங்கத் தந்தது சென்னை மாவட்டம். அந்த முழுப் பொறுப்பும், பெருமையும் கோவிந்த

சாமி அவர்களையே சேரும் என்று கூறுவது சரியான தாகும்.

இதைப்போல இயக்க வளர்ச்சிக்காக பல காரியங்களை செய்து காட்டிய செயல் வீரர். பாவம்! அவர் சலியாது உழைத்தார். ஆனால் அவர் உடல் நலம் நாளுக்குநாள் குன்றிக்கொண்டே வந்தது. அவர் தன் உடலில் சக்தி இருந்த வரையில் அஞ்சவில்லை அயரவில்லை. நிலைமை மிகவும் மோசமாகிவிட்டபடியால், அவர் தன் உடலை பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்பட்டார். கோவிந்தசாமி அவர்கள் தன் உடலைப்பற்றிக் கவலைகொள்ளவில்லை. ஆனால் குடும்பத்தார் அவரை மிகவும் வற்புறுத்தி உடலை கவனிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அதன் காரணமாக அவர் சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் பதவியிலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. மனமின்றி விலகினார். சென்னை மாவட்டமும் பிரியாவிடை தந்தது.

அதன் பிறகு அவர் வெளியூர் சென்று தன்னை கொடுமைபடுத்திய நோயை சற்று தணித்துக்கொள்ள முயன்றார். இன்று அவர் திரும்பிவந்துவிட்டார். ஆனால் முன்போல் பணியாற்ற முடியாது.

ஆம்! தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கிடைத்த ஒரு பெரிய பொக்கிஷம். ஆனால் அது இன்று ஒதுங்கி இருக்கிறது முடியாமையால்:

ஆம்! தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் உடல் நன்கு வலுப் பெற்று, திடகாத்திரராய் பன்னெடுங் காலம் வாழவேண்டும் என்று நான் விரும்புகின்றேன். நல்லவர்களின் விருப்பமும் இதுவே யாகும்.

வாழ்க! திராவிடம்.

# S. K. சாமி

1927—ஆம் ஆண்டில் ஒரு நாள் ஒரு பெருங் கூட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் ஆயிரமாயிரம் மக்கள் கூடிக் கொண்டிருந்த னர். சொற்பொழிவாற்றுவோர் மிக மிக முக்கியமான விஷயங்களையும்—சிக்கலான விஷயங்களையும் விளக்கிக் கொண்டே வந்தார். அத்துடன் இதுவரையிலும் எவரும் பேச, பேச அஞ்சும் புதிய விஷயங்களைப் புட்டுப் புட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார். அங்கே கூடியிருந்த மக்கள் தங்களை மறந்தவர்களாய் அந்தச் சொற்பொழிவில் முழு கவனமும் செலுத்திக் கொண் டிருந்தனர்.

அந்தகூட்டத்தில் எத்தனையோ பேர்களிருந்தாலும் ஒருவர் மட்டும் மிக மிக ஆர்வத்துடனும், அக்கரையுட னும், தெளிவுடனும் கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு சொற்பொழிவாளர் கூறும் ஒவ்வொரு பதமும் உண்மை என்றே பட்டது. அவர் கூறும் மாறுதல்கள் உடனடியாக இந்த நாட்டில் நடைபெற்றாக வேண்டும் என்று கருதினர். அந்த அரிய சொற்பொழி வாளரின் ஆழ்ந்த கருத்தையும், அஞ்சாமல் எடுத்துக் கூறும் ஆற்றலையும் கண்டு அதிசயித்தார். அவர் ஒருவர்தான் உண்மையான வழிகாட்டி, உண்மையான தலைவர், என்பதை அவர் உள்ளம் சிந்தித்து முடிவு செய்து விட்டது. அன்று முதல் அவருடைய கொள்கை

யை யேற்றுக் கொண்டார். அவருடைய தலைமையில் பணியாற்ற விரும்பினார்.

யார் அந்த சொற்பொழிவாளர் ?

பெரியார் இராமசாமி.

'யார் அந்தப் பேச்சை கேட்டு தெளிந்தவர்?'

'தோழர் S. K. சாமி'

தோழர் S. K. சாமி அவர்கள் இயக்கத்தில் நுழைந்து பணியாற்ற பெரியார் அவர்களுடைய சொற்பொழிவுதான் காரணமாகும்.

1907—ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஏழாம் நாள் அவர் பிறந்தார் அவருடைய தந்தையார் பெயர் செருவலிங்கம்.

1923—ம் ஆண்டுடன் அவர் படிப்பை முடித்துக் கொண்டார்.

கொஞ்சகாலம் அவர் மலாயாவில் ஒரு மேனேஜர் வேலைபார்த்து வந்தார்.

1934—ஆம் ஆண்டில் நமது தளபதி, மறைந்த மாவீரன், அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி அவர்களுடன் இலங்கைக்குச் சென்று பணியாற்றி இருக்கிறார்.

இவர் இன்பபுரி வாழ்வில் மிதந்தவரல்ல துன்பம் பல கண்டவர். ஆனால் அந்த துன்பம் அவருடைய நம்பிக்கையை ஒழித்து விடும் அளவுக்கு ஆற்றலுடையதாக இல்லை.

திராவிட மக்களை நல்லதொரு வழிக்கு அழைத்துச் செல்ல அரும்பாடு பட்டவர்களில் இவரும் ஒருவர். தன்னுடைய வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற அளவு இயக்கப் பணி செய்து வந்திருக்கின்றார் தோழர் **S. K.** சாமி.

1937-ம் ஆண்டில் நமது அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்தார். திராவிடம் வெறுத்த—வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிய—இந்தி நுழைந்த போது அதாவது 1938-ல் அதனை எதிர்த்து போராடிய திராவிடப் பெரும் படையின் தளபதிகளில் ஒருவராக இருந்தார். ஆம் தோழர் **S. K.** சாமி இந்தி எதிர்ப்புப் படையின் ஐந்தாவது சர்வாதிகாரியாக இருந்து பணியாற்றினர்.

நாட்டிற்கு கேடு விளைவிக்க வந்த இந்தியை ஒழிக்கவும், திராவிட மக்களின் நலனைக் காக்கவும், தமிழை வாழவைக்கவும் பாடுபட்ட காரணத்திற்காக சிறைவாசம் பெற்றார்.

தோழர் **S. K.** சாமி அவர்கள் பார்வைக்கு எளியவர் தான்: ஆனல் பயங்கொள்ளி அல்ல. அவர் மேடைகளில் பேசும்போது மக்கள் எல்லாச் சுவைகளையும் அனுபவிப்பார் அவர் பேசும் போது, அவருடைய உரைகளில் எரிமலைகள் வெடிக்கும், அடுத்த சில நிமிடங்களில் தேனாறு பாயும், மறுபடியும் புயல் வீசும், அடுத்தக் கணமே தென்றல் தவழும். கண்டனக் கணைகளை தன் உறுதியான உரைகள் மூலம் வெளியிடுவார் நகைச்சுவை அமைப்பு அவருக்கு அமைந்திருப்பதே ஒரு அலாதி!

இவ்விதமாக சகல ரசங்களும் நிரம்பிய பேச்சாளர்தோழர் **S. K.** சாமி அவர்கள்.

தோழர் S. K. சாமி அவர்களின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும், வைதீகக் கோட்டையின் மீது வீசப்பட்ட குண்டு. அவர் பேச்சைக் கேட்கும் எவ ரும் தன் மனதிலுள்ள பழைமையை மாற்றி அமைத் துக் கொள்ள முற்படுவார்.

இவ்விதமாக திராவிட நாட்டிற்குப் பாடுபட்டு வந்தார். ஆனல் இவர் செய்கை பழமை விரும்பி களுக்குப் பிடிக்க வில்லே, கோயில் பெருச்சாளிகளுக் குப் பிடிக்க வில்லே. ஆகவே இவரை எதிர்த்தனர். ஒழித்து விடவும் முயன்றனர்.

நல்லவர்கள் சேவையை ஆரம்பத்தில் எந்த நாடு போற்றி இருக்கிறது? எந்த உத்தமர் உண்மையை எடுத்துக் கூறியதற்காக அப்போதே புகழப்பட் டிருக் கின்றனர்?

அமெரிக்காவில் கறுப்பர்கள்—அடிமைகள் என்று மக்கள் கூட்டத்தை இழிவாக நடத்தி வந்தனர். விலங்கு களே விட கேவலமாக மதிக்கப் பட்டும், நடத்தப் பட்டும், வந்தார்கள். இந்த கேவல—இழிந்த—மனித இதயம் விரும்பாத கொடுஞ் செய்கையை ஒழிக்க எவர் எண்ணி னர். சின்னஞ் சிறு பிள்ளேயாக இருந்த போது, அடிமைகள் ஆடுமாடுகளே விற்பது போல் சந்தையில் விற்பனே செய்வதைக் கண்டான் ஒரு சிறுவன். அப் போது அவன் ஏழைச் சிறுவன், இருந்தும் அவனுடைய தூய குழந்தை உள்ளம், நான் இந்த நாட்டின் ஜனதி

பதியானல் அடிமைகளை விடுவிப்பேன் என்று எண்ணியது.

ஆனல் அந்த எண்ணம் பொய்யாகப் போக வில்லை. சிறுவன் பெரியவனுனன். தன் சொந்த முயற்சியால் சிறுகச் சிறுக வளர்ந்தான். ஜனதிபதியானன்.

பட்டம், பதவிகள் மனிதனை எத்தனையோ மாறுதல்களை செய்கின்றன என்பதை நாம் நடை முறையில் பார்த்திருக்கிறேம். ஆனல் அந்த ஜனதிபதி சிறு வயதில் தான் எண்ணியதை மறந்துவிட வில்லை. அதற்காகப் பாடு பட்டான்.

தேர்தல் காலத்தில் ஓட்டுப் போடும் வரையில் அதைச் செய்கிறேன் இதைச் செய்கிறேன் என்று வாய் கிழியக் கத்திவிட்டு மௌனம் சாதிப்பவரைப் போல் இல்லை அவன்.

உடனே இந்த நாட்டில் அடிமைகள் இருக்கக் கூடாது என்ருன். ஆரம்பத்தில் அவன் கருத்தை எவரும் ஏற்றுக் கொள்ள வில்லை. அதற்காக தன்னுடைய நல்ல கருத்தை—உண்மையான தூய்மையான கருத்தை மாற்றிக் கொள்ள வில்லை. அடிமை விடுதலையின் அவசியத்தை எடுத்து விளக்கினர்.

இதன் காரணமாக வட நாடும். தென் நாடும் போர் புரிந்தன. இருந்தும், வெற்றி அடிமையை ஒழிக்கப் பாடுபட்ட அந்த உத்தமனுக்கே கிடைத்தது. அவனைத் தான் இன்று அடிமை விலங்கை அறுத்தெறிந்த அமெரிக்க வீரன் ஆபிரகாம் லிங்கன் என்று உலகம் போற்றுகிறது.

அடிமைகளுக்காக போராடி வெற்றி பெற்ற ஆபிர காம் லிங்கன் ஒரு வெள்ளையன். இருந்தும் கருப்பு நிற நீக்ரோக்கள் வாழ்வுக்காகப் பாடு பட்டான். இருந்தும், அவன் அந்த இனத்து விடுதலை வாங்கித் தந்தான்.

ஆனல்! அந்த வீரனுக்கு அந்த இனத்தான் ஒரு வனல் பரிசு தரப்பட்டது தோழர்களே! ஆம்! எந்த இனத்திற்காகப் பாடுபட்டானே அந்த இனத்தவனே அவரைச் சுட்டுக் கொன்ருன்.

இது நமக்கு அமெரிக்கா நாட்டு வீரன் ஆபிரகாம் லிங்கன் வரலாறு கற்றுக் கொடுக்கும் பாடம்!

* * * *

கிரேக்க ஞானி சாக்ரடீஸ் அவர்கள் மக்கள் முன்னேற வழி சொன்னர். நாகரிக முறைகள் இவை என்று சுட்டிக் காட்டினர். இந்த முறை நல்ல முறை வளரும் முறை—பிறரையும் வளரச் செய்யும் ஒழுங்கு முறை என்று எடுத்துக் கூறினர்.

உண்மையை நேசிக்கச் சொன்னர், பொய்யை ஒழிக்கச் சொன்னர். உலகத்தில் எவரும் முட்டாள் களாக இருக்கக் கூடாது என்று அவர் ஆசைப் பட் டார். கடவுள் என்ருல் என்ன? என்ற கேள்வியை எழுப்பினர். இளைஞர்களே நீங்கள்தான் எதிர்கால உல கம் இதனை மறந்து விடாதீர்கள் என்று அவர்களுக்கு இறந்த காலத்தை நினைவு படுத்தி நிகழ் காலத்தைச் சுட்டிக் காட்டி, எதிர் காலத்தையும் எழுதிக் காட்டினர்.

இந்த நல்லவரைப் பொல்லாதவர் என்று கூறினர். அந்த நாட்டிலே வாழ்ந்த ஒரு சில துரோகிகள்.

நல்லவர்—அவர் காலத்தில் அவரைவிட அறிவில் முதிர்ந்தவர் இல்லை—இன்றும் அப்படித்தான் என்று உலகம் கூறுகிறது. இருந்தும் அவர் கைது செய்யப்பட்டார். இளைஞர்களைக் கெடுத்துவிடுகிறான், கடவுளைச் சந்தேகிக்கின் என்ற குற்றங்கள் அவர் மீது சுமத்தப்பட்டன.

அவருக்கு தண்டனை என்ற பெயரால் ஒரு கோப்பை விஷம் தரப்பட்டது. அதனை அவர் புன்முறுவலுடன் குடித்தார்.

இது ஞானி சாக்ரடீஸ் வாழ்க்கை வரலாறு புகட்டும் பாடம்.

*　　*　　*

இதைப்போல ஒன்றல்ல பலப்பல எடுத்துக்காட்டுகள் காட்டலாம், ஏன் இதனை இங்கே சுட்டிக்காட்ட நேர்ந்தது என்றால், தோழர் S. K. சாமி அவர்களும் நாட்டு மக்களுக்கு நலிவு தரும் சிலவற்றை எடுத்து போதித்து அதன் பிடியிலிருந்து விலகவேண்டும் என்று கூறிக்கொண்டே வந்தார்.

கோயில்கள், மதங்கள், குருமார்கள் இவைகள் மக்கள் நன்மைக்காகப் பாடுபடுவதில்லை. ஒரு சில கூட்டத்தினருக்கே அது பயன்படுகிறது. என்ற பல மூடக் கொள்கைகளை குருட்டு நம்பிக்கைகளை அம்பலப்படுத்தி வந்தார்.

இந்த வாசகங்கள் வைதிகர்களுக்கு மகிழ்ச்சியையா நல்கும்? இவர்மீது சினந்தெழுந்தனர்.

தோழர் S. K. சாமி அவர்களை கோயில் கட்டி, நன்றாக அடித்து ஒழித்துவிட முயன்றனர். ஆம்! 1944-ஆம் ஆண்டில் இவ்விதம் நடைபெற்றது. நல்ல வேளையாக நமது தோழர் S. K. சாமி அவர்களுக்கு ஆபிரகாம் லிங்கன், சாக்ரடீஸ் போன்றவர்களுக்கு ஏற்பட்ட முடிவு ஏற்படவில்லை. அதுவரையில் நமக்கு லாபம்தான்.

1948-ஆம் ஆண்டில் தடை உத்திரவை மீறியிருக்கிறார். எதிர்புக்கு அஞ்சாத ஆண்மையாளர் தோழர் சாமி அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகர்களில் ஒருவரான தோழர் சாமி அவர்கள் சாதாரண மனிதர்; ஆனால் பழைய சம்பிரதாயங்களை அழித்து ஒழிப்பதில் இரும்பு மனிதர். நல்லவர்களால் விரும்பப்படுபவர்; ஆனால் அவரை ஒரு சில குள்ளநரி குணம்படைத்தவர் வெறுக்கின்றனர். எப்படி நமது இயக்கம் எதிர்பிலே வளர்ந்ததோ அதுபோலவே தோழர் சாமியும் எதிர்ப்பிலே வளர்ந்தவர். இணையற்ற வீரர், தன்னலம் கருதாத தகைமையாளர், திராவிடத்தை முன்னுக்குக் கொண்டுவரப் பாடுபடும் முற்போக்காளர். அண்ணாவின் தலைமையில் பணியாற்றும் பண்பினர். அவருடைய அருந்தொண்டை திராவிடம் நாடி நிற்கிறது.

வாழ்க தோழர் S. K. சாமி!

வாழ்க திராவிடம்!

68244

ஸ்ரீ மகள் அச்சகம், சென்னை-1

## அறிஞர்கள் சிந்திய

## அமுதத் துளிகள்

| | |
|---|---|
| தாகூர் முத்துக்குவியல் | 0 80 |
| லெனின் பொன்மொழிகள் | 0 80 |
| இங்கர்சால் அறிவுரைகள் | 0 80 |
| விவேகானந்தர் வீரவுரைகள் | 0 80 |
| இராமகிருவ்ஷ்ணர் அருள்மொழிகள் | 0 80 |
| இயேசுநாதர் அருள்வாக்குகள் | 0 80 |
| கம்பர் கற்பனைகள் | 0 80 |
| கீதை உபதேசமொழிகள் | 0 80 |
| ஷேக்ஸ்பியர் வர்ணனைகள் | 0 80 |
| ஸ்டாலின் புரட்சிமொழிகள் | 0 80 |
| வள்ளலார் வாய்மொழிகள் | 0 80 |
| அண்ணாவின் உவமைகள் | 0 80 |
| கருணாநிதியின் கருத்துரைகள் | 0 80 |
| திருக்குறள் | 0 80 |
| மாஜினி மணிமொழிகள் | 0 80 |

**கலைமன்றம்**

சென்னை - 1

## வீர வரலாறுகள்

| | | |
|---|---|---|
| **ஊடுருவி எழுதியவை:—** | | |
| வீரமங்கை ஜோன் | 1 | 0 |
| நெப்போலியன் | 1 | 0 |
| சீனத்துச் சிங்கம் (சன்யாட்சன்) | 1 | 0 |
| வால்டையர் | 1 | 0 |
| உலகைத் திருத்திய உத்தமர்கள் | 1 | 0 |
| ,, இரண்டாம் பாகம் | 1 | 0 |
| கலிங்கப் போர் | 1 | 0 |
| **விருதை ந. இராமசாமி:—** | | |
| தாமஸ் மசாரிக் | 1 | 0 |
| **மு. நமசிவாயம்:—** | | |
| தூத்துக்குடி துப்பாக்கி பிரயோகம் | 0 | 8 |
| கல்வி திட்டப் போராட்டம் | 0 | 8 |
| டால்மியாபுரப் போராட்டம் | 0 | 8 |

# கலைமன்றம்

சென்னை-1.

திராவிட இயக்கத் தலைவர்கள்

# வாழ்க்கை வரலாறுகள்

★

| | | | |
|---|---|---|---|
| 1. | அறிஞர் அண்ணாதுரை | 0 | 8 |
| 2. | தலைவர் பெரியார் | 0 | 8 |
| 3. | புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் | 0 | 8 |
| 4. | கடமை வீரர் கருணாநிதி | 0 | 8 |
| 5. | அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி | 0 | 8 |
| 6. | பன்னீர் செல்வம், பாண்டியனார், வேலாயுதம் | 0 | 8 |
| 7. | நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன் | 0 | 8 |
| 8. | சம்பத், நீலமேகம் | 0 | 8 |
| 9. | ஆசைத்தம்பி, சிற்றரசு | 0 | 8 |
| 10. | இராமாமிர்தத்தம்மையார், பூங்கோதை, அருண்மொழி, | 0 | 8 |

— கழிவு வழக்கம் போல் —

கிடைக்கும் இடங்கள்

**கலைமன்றம்**
122, வரதாமுத்தியப்பன்தெரு,
சென்னை—1

**M.S. ராமுலு கம்பெனி**
296, சைனா பஜார்
சென்னை—1